**அசல்வழக்கு எண். OS. 411 /2021- PW4 .**

**திரு. முனிராஜ் த/பெ.பேட்டராயப்பா**

**நாள்:11.01.2024**
**குறுக்கு விசாரணை :**

சத்தியமாகச் சொல்கிறேன். நான் 1960ம் வருடம் பிறந்தேன். பெரிய வெங்கடராமையா சின்ன வெங்கடராமையா ஆகியோர் சேர்ந்து எந்த வருடம் சொத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தை ஒரு சுப்பையா என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார்கள். சின்ன வெங்கடராமைய மற்றும் பெரியவெங்கடராமையா கிரயம் வாங்கியதாக சொல்லும் கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. பெரிய வெங்கடராமையா பெங்களூருக்கு குடி சென்று சுமார் 25 வருடம் ஆகிறது. பெரிய வெங்கடராமையா பெங்களூருக்கு போகும் போது அவரது பாக சொத்து யாருக்கு விற்பனை செய்தார் என்று எனக்கு தெரியாது. கிருஷ்ணம்மாவை நான் பார்த்துள்ளேன். கிருஷ்ணம்மா தானபத்திரம் எழுதி உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் வெங்கடாசலபதி அழைத்ததால் தான் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் வாதி வெங்கடாசலபதி சொல்லி கொடுத்ததை நீதிமன்றத்தில் வந்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்./-எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**